செ.வெ.எண்: 39/பிப்ரவரி நாள் : 19.02.2016

**இராமநாதபுரம் மாவட்டத்தில்**
**போலியோசொட்டுமருந்துமுகாம் 21.02.2016 அன்று** நடைபெறவுள்ளது
**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

போலியோ நோயை இவ்வுலகத்திலிருந்து ஒழிக்கும் நடவடிக்கையாக நாடுதழுவிய போலியோசொட்டு மருந்துமுகாம் 2016 ஆண்டு இரண்டாவது தவணையாக வரும் 21.02.2016 காலை 7 முதல் 5 மணிவரை நடைபெறவுள்ளது.

பிறந்த குழந்தை முதல் ஐந்துவயதிற்குட்பட்ட குழந்தைகள் வரை அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது. அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்பசுகாதாரநிலையங்கள், அங்கன்வாடிமையங்கள், பள்ளிகளில் வழங்கப்படவுள்ளது. மேலும், கோவில்கள், பேருந்துநிலையங்கள், புகைவண்டி நிலையங்கள் மற்றும் மக்கள் கூடும் நிலையங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்படவுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1212 மையங்களில் நடைபெறவுள்ளது. 122588 குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளது. மொத்தம் 4848 பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். 11 நடமாடும் குழுக்கள் செயல்படவுள்ளது. விடுபட்ட குழந்தைகளுக்கு 22.02.2016 மற்றும் 23.02.2016 ஆகிய தேதிகளில் சுகாதாரப்பணியாளர்கள் களப்பணியில் போலியோசொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை எத்தனை முறை போலியோ சொட்டுமருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் இம் முறையும் தவறாமல் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்படவேண்டும்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**